## இறுதிச் செபம்:

உமது நடவடிக்கைக்குப் பயன்படுத்த
எனது கைகளைக் கேட்டீர், நான்
கொடுத்தேன், வேலை பளுவாக
இருந்ததால், மீட்டுக் கொண்டேன்.

அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க எனது
வாயைக் கேட்டீர், எந்த பொல்லாங்கு
வராமல் இருக்க காதோடு பேசினேன்.

என் வழியாக நீர் செயல்பட எனது
வாழ்வைக் கேட்டீர்,
எதிலும் சிக்கிக் கொள்ளாமல் இருக்க
சிறு பகுதியைக் கொடுத்தேன்.

எனக்கு எங்கு வசதியாக இருக்கிறதோ,
எனக்கு எங்கு பாதுகாப்பாக
இருக்கிறதோ, எனக்கு எளிதாக
இருக்கிறதோ, அங்கு மட்டும்
பணியாற்றும் எனது சுயநலப் போக்கை
ஆண்டவரே மன்னியும்.

ஆண்டவரே, என்னை மன்னித்து,
குணமளித்து, புத்துயிரளித்து,
ஊக்கமளித்து, உமது நீதியின்
அமைதியின் கருவியாக அனுப்பும் உமது
பணியின் தலைமைத்துவத்தைப்
போரார்வத்தோடு மேற்கொள்வேன். ஆமென்

*(Joe Seramane, Christian Aid Lifelines, South Africa)*

## முடிவு பாடல்:

### அமைதியின் தூதனாய்

அமைதியின் தூதனாய் என்னையே
மாற்றுமே (2)
அன்பனே இறைவனே என்னிலே
வாருமே
அமைதியின் தூதனாய் என்னையே
மாற்றுமே

1) பகைமையுள்ள இடத்தில் பாசத்தை
வளர்க்கவும் (2)
வேதனை நிறைந்த மனதில் மன்னிப்பு
வழங்கவும்
கலக்கம் அடையும் வாழ்வில்
நம்பிக்கை ஊட்டவும் (அமைதியின்)

2) தளர்ச்சி ஓங்கும்போது மனத்திடம்
தழைக்கவும் (2)
இருளே சூழும் வேளை, ஒளியை
ஏற்றவும் துயரம் வாட்டும் நேரம் உதயம்
காணவும் ( அமைதியின்)

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம் | அக்டோபர் 2020

# அதிசசிந்தனை

# புடைப்பைச் சீரமைக்கக் குணமளிப்பு

நோக்கம்: கடவுள் படைப்பின் காவலன்   நிகழ்வு: புனித பிரான்சிஸ் அசிசியார்

முன்னுரை: புனித பிரான்சிஸ், சூழியலின் பாதுகாவலர் என புனித ஜோன் பவுல் 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் தேதி அறிவித்தார். கடவுள் உலகத்தை நிறைவாகவும் அழகாகவும் படைத்ததால்,எல்லாப் படைப்புகளும் கடவுளைப் போற்ற வேண்டும் என புனித பிரான்சிஸ் போதித்தார். கடவுளின் படைப்பு என்ற முறையிலும் கடவுளின் படைப்பின் காவலன் என்ற முறையிலும் மனிதன், இயற்கையைப் பாதுகாத்து, அனுபவிக்க வேண்டும்.

எனவே, “இயற்கையை நாசப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது என்பது படைப்பின் மீதான புனித பிரான்சிஸ் கொண்டுள்ள அன்பும் அக்கறையும் நமக்கு நினைவுப்படுத்துகிறது. இயற்கை என்றும் எழிலாகவும் வளமாகவும் இருப்பதற்கு வேண்டிய அக்கறையையும் பொறுப்பையும் மனிதன் கொண்டிருக்க வேண்டும்” என புனித ஜோன் பவுல் கூறினார். எல்லாப் படைப்பின் மீதும் தூய அன்பும் மதிப்பும் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு “புனித பிரான்சிஸ்”, கிறிஸ்துவர்களுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. மனிதக்குலத்தோடு ஒன்றித்த எல்லாப் படைப்புகளோடும் நட்புறவை வளர்த்துக் கொள்ளப் பாடுபடுவோம்.



“எல்லாம் வல்ல இறைவன் படைத்த எல்லாவற்றுடன் பற்றுதலுடன் வாழும் வேண்டும் என்பதற்கு புனித பிரான்சின் ஆவல் நமக்குத் துணைபுரியும்” என புனித ஜோன் பவுல் நம்பிக்கை தெரிவித்தார்.

## தொடக்கச் செபம்:

அதிச உறுப்பினர் ஒருவரை ஆரம்ப செபம் கூற அழைக்கலாம்

## தொடக்கப் பாடல்:

### படைத்தாய் இறைவா

படைத்தாய் இறைவா படைப்புகளை
அதில் கருணையும் அன்பும் எருவாக்கி (2)
வடித்தான் மனிதனை மண்ணினின்று
அதில் ஆவியும் அறிவும் பயிராக்கி (2)
கெடுத்தான் அழகின் படைப்பினையே
தன் மதியாணவப்பழி செயலால்
படைத்தாய் இறைவா படைப்புகளை

(1) பூக்களைப்படைத்தாய் தேனும் வைத்தாய்
வந்தேன் பாவி மனிதனங்கே(2)
விஷத்தைக் கலந்தான் விஷமம் செய்தான்
விடியா வாழ்க்கு தடை நின்றான்(2)
கெடுத்தான் அழகின் படைப்பினையே
தன் மதியாணவப்பழி செயலால்
படைத்தாய் இறைவா படைப்புகளை

(2) கரத்தை விரித்தாய் கருணையும் விரித்தாய்
கரைந்திடும் அன்பில் குளிரவைத்தாய் (2)
தந்தையுன் அன்பை அளந்திட முடியுமோ
என்றே உணர்ந்தேன் மனிதன் இன்று
கெடுத்தான் அழகின் படைப்பினையே
தன் மதியாணவப்பழி செயலால்
படைத்தாய் இறைவா படைப்புகளை

## உரையாடல்:

'இறைவா உமக்கே புகழ்'(Laudato Si) சுற்றுச்சூழல் மீதான திருத்தந்தை பிரான்சிஸ் சுற்றுமடல். 'நமது பொது இல்லமாகிய பூமியைப் பாதுகாத்தல்' என்பது அதன் கருப்பொருள். நமது பொது இல்லம் குறித்து எல்லா மனிதர்களுடனும் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் என்பது இந்த சுற்றுமடலின் நோக்கம் என திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டிருக்கிறார். சுற்றுச்சூழல் சவால்களையும் அதனால் மனுக்குலத்தின் பாதிப்பையும் எதிர்கொள்ள எதிர்காலத்தில் நமது பூமியை உருவாக்கப் போகிறோம் என்ற அர்த்தமுள்ள கலந்துரையாடலை நடத்த வேண்டும். இதனை, 'சூழியல் மாற்றம்' என திருத்தந்தை பிரான்சிஸ் அழைக்கிறார். "கடவுளின் கைவண்ணத்தைப் பாதுகாப்பது நமது வாழ்வின் அழைப்பு, அதுவே அறவாழ்வுக்கு அவசியம்" என திருத்தந்தை குறிப்பிடுகிறார்.

'இறைவா உமக்கே புகழ்'(Laudato Si), பிரபஞ்சம் மீதான மனிதனின் ஆளுமையைக் காவலன் என்ற பொறுப்புணர்வோடு புரிந்து கொள்ள வேண்டும் என கூறுகிறது. கடவுள் எல்லாவற்றையும் படைத்தார் என்பதால் அவற்றைக் காக்கும் பொறுப்பு நமக்குண்டு. கடவுள் கொடுத்த எல்லாவற்றையும் இறைவனின் புகழுக்காகவும் படைப்பின் மேன்மைக்காகவும் பயன்படுத்திப் பாதுகாக்க வேண்டும். கடவுள் கொடுத்தக் கொடைகளைப் பயன்படுத்தி பாதுகாக்கும் பொறுப்பு கிறிஸ்துவர்கள் என்ற முறையில் நமக்குண்டு.

எல்லா வல்ல தந்தை எல்லாவற்றுக்கும் சொந்தக்காரர். நாம் அவர் சார்பில் எல்லாவற்றையும் நிர்வகித்து வருகிறோம். எனவே, கடவுளின் படைப்பை நாம் எவ்வாறு நடத்துகிறோம் எவ்வகையில் பயன்படுத்துகிறோம் என்பதற்கெல்லாம் நாம் பொறுப்பாளி. அவரது திட்ட நோக்குப்படி அவரது படைப்பை நிர்வகிக்க வேண்டும். தாலந்து உவமை(மத்தேயு25:14–30), நாம் கடவுள் படைப்பின் காவலர்கள் என்பதை எடுத்துரைக்கிறது. கடவுள் கொடுத்த எல்லாவற்றுக்கும் ஒரு நாள் நாம் கணக்குக் காட்ட வேண்டும்.

இந்த உலகிலுள்ள எதையும் நாம் அலட்சியப்படுத்தக்கூடாது என ஆயர் பெர்னட் போல் (மலாக்கா–ஜோகூர் மறைமாவட்டம்) வலியுறுத்தியுள்ளார். இம்மாதிரியான அலட்சியப் போக்கினால், கடல் அளவு உயர்வது, பாதகமாக தூய்மைக்கேட்டு நடவடிக்கை, பழங்குடி மக்களின் உரிமையையும் சுற்றுப்புறத்தையும் புறம்தள்ளுதல், உயிரினங்கள் வழக்கொழிவு முதலியவை நிகழ்வதை அன்றாட பத்திரிகைகளில் நாம் படிக்கிறோம். இதனல் மீன்பிடி மற்றும் கிராமப்புறச் சமூகங்கள் பாதிக்கப்படுகின்றன. நம்மிடம் இருக்கும் இயற்கை வளங்கள் எக்காலமும் நீடிக்கும், அவற்றை நாம் விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற தவறாக கருத்தைப் போக்க வேண்டிய அவசியமும் அவசரமும் உண்டு என (மலாக்கா–ஜோகூர் மறைமாவட்ட மனித மேம்பாட்டு அலுவலகத் தலைவர்) முதன்மைக்குரு மைக்கல் மன்னாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

(2020–2022, மலாக்கா–ஜோகூரி மறைமாவட்ட தவக்கால இயக்க வழிகாட்டிப்புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதி)

### கலந்துரையாடுவோம்

- கடவுளோடு பேசும் போது; அவரது படைப்பின் தற்போதைய நிலை பற்றிய உங்கள் எண்ணத்தையும் கவலையையும் கேள்வியையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- கடவுள் படைப்பின் காவலன் என்ற முறையில், நடப்புச் சுற்றுப்புற விவகாரங்கள் குறித்து உங்கள் குடும்பத்தில், வேலையிடத்தில், உங்கள் சமூகத்தில் நீங்கள் செய்த அல்லது செய்யத் தவறியது எவை?

## இறைவார்த்தை:

### தொடக்க நூல் 1:31

கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாள் முடிந்தது.

### சிந்தனை:

- வாசகத்தைச் சத்தமாக வாசித்து திறந்த மனத்தோடு கேட்கவும்.
- வார்த்தையோ வசனமோ உங்கள் மனதைத் தொடும் வரை மௌனமாக இதை வாசிக்கவும்.
- அந்த வார்த்தை அல்லது வசனம் வழி உங்களுக்கு தூய ஆவியார் சொல்வது என்ன?
- ஆண்டவரின் குரலுக்கு நீங்கள் கூறும் பதில் என்ன?
- சிறிய குழுக்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் (3-4 பேர்)

### செயல்:

- கடவுள் படைப்பின் காவலன் என்ற முறையில்; 6 Rs (Refuse, Reuse, Regenerate, Repurpose, Repair and Recycle) மறுத்தல். மறுபயன்பாடு, மீளுருவாக்கம், மறு நோக்கம், பழுதுபார்த்தல், மறு சுழற்சி, எவ்வகையான மாற்றங்களை என்னால் கொண்டு வர முடியும்.
- எவ்வகையான சுற்றுப்புறச் சார்பு பழக்கத்தை கையாண்டு வருகிறீர்கள்?
- உங்கள் அதிச-உடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.